**பொ.து.ந.க.எண்.இ9/20126/2021**

**தீர்மான எண்.644/2021** **நாள்:09-08-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-10 - திரு.A.ரோகன்நந்த், AMO பணியாளர், பணி எண். 861893, சுகாதாரத்துறை அவர்கள் சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களுக்கு இராஜினாமா வேண்டி 30.04.2021 அளித்த மனு மீது தனியரை 28.07.2021 அன்று பிற்பகல் முதல் பணி விடுவிப்பு செய்ய அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியில் இருக்கும் போது காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் 04.04.2018 பிற்பகல் முதல் AMO பணியாளராக மண்டலம்-10ல் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வரும் தனியர் சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களுக்கு தான் சொந்த ஊரில் சென்று குடும்பத்துடன் குடிபெயர உள்ளதால், என்னுடைய பணியை இராஜினாமா செய்கிறேன் என தெரிவித்து, 30.04.2021 நாளிட்ட மனு அளித்துள்ளார்.

காவல்துறை துணை கண்காணிப்பாளர்/விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 23.06.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது இன்றைய தேதியில் பெரு சென்னை மாநகராட்சி விழப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி தொழிலாளர் கூட்டுறவு சங்கம், சிந்தாதிரிப்பேட்டை அவர்களின் 08.07.2021 நாளிட்ட கடிதத்தில், திரு.A.ரோகன்நந்த், AMO பணியாளர் என்பவர் சென்னை மாநகராட்சி தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அவர்களின் 29.07.2021 நாளிட்ட குறிப்பில், திரு.A.ரோகன்நந்த், AMO பணியாளர், சுகாதாரத்துறை என்பவருக்கு அப்பதவியில் 04.04.2018 அன்று பணிவரன்முறையும், 04.04.2020 அன்று தகுதிகாண் பருவம் வழங்கப்பட்டும், தனியர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றச்சாட்டுகள் முன்பண நிலுவை, தணிக்கைத்தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்தும், தனியருக்கு பண்டிகை கால முன்பணம் நிலுவை தொகை ரூ.7,000/- சென்னை மாநகராட்சி கருவூலத்தில் 08.07.2021 அன்று செலுத்திய இரசீது இணைக்கப்பட்டும், சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், அதனை ஒரே தவணையில் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திவிடுவதாக 29.07.2021 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளதால், திரு.A.ரோகன்நந்த், AMO பணியாளர், சுகாதாரத்துறை என்பவரின் இராஜினாமா கோரும் 3 மாத காலமான அறிவிப்புக்காலம் 28.07.2021 அன்று முடிவதால், தனியரை 28.07.2021 அன்று பிற்பகல் முதல் இராஜினாமா (பணி விடுவிப்பு) செல்வதற்கு, அனுமதிக்க சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களின் ஆணை வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சமர்ப்பிப்பது யாதெனில், Tamil Nadu State Subordinate Service Rulesல்,

50. (1) A Government servant may resign his appointment by giving notice of not less than three months in writing direct to the appointing authority with a copy marked to his immediate superior officer. The period of three months notice shall be reckoned from the date of receipt of such notice by the appointing authority.

(2) The Government servant may withdraw the notice of his resignation before its acceptance and withdrawal of resignation shall not be permitted after its acceptance by the appointing authorityன்படி, திரு.A.ரோகன்நந்த், AMO பணியாளர், சுகாதாரத்துறை என்பவரின் 21.07.2021 நாளிட்ட ரூ.20 உறுதி மொழி பத்திரத்தில், மண்டலம்-10, சுகாதாரத்துறையில் பணிபுரிந்து வரும் நான் எனது குடும்பத்துடன் சொந்த ஊரில் குடிபெயர உள்ளதால், சென்னை மாநகராட்சி பணியினை இராஜினாமா செய்வதற்கு, மனப்பூர்வமாக சம்மதிக்கிறேன் எனவும், மேலும், நான் இராஜினாமா செய்த பின் சென்னை மாநகராட்சி பணியினை திரும்ப வேண்டும் என கோரமாட்டேன் என உறுதிமொழியின் மீது, மண்டல அலுவலர், மண்டலம்-10 அவர்களால் சான்றொப்பம் பெறப்பட்டுள்ளது.

எனவே, திரு.A.ரோகன்நந்த், AMO பணியாளர், சுகாதாரத்துறை என்பவரை பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் இருந்து 28.07.2021 அன்று பிற்பகல் இராஜினாமாவில் (பணி விடுவிப்பு) செல்ல, ஆணை வழங்க சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 05.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"இராஜினாமாவை ஏற்று, பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் இருந்து 28.07.2021 அன்று பிற்பகல் விடுவிப்பு செய்ய சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**பொ.து.ந.க.எண்.இ7/10903/2021 &**
**பொ.சு.து.ந.க.எண். சி2/3818 /2020**

**தீர்மானஎண்.645 / 2021** **நாள்:09-08-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - பொது சுகாதாரத்துறை - 2020-2021 ஆம் ஆண்டில் 01.07.2020 என்ற மைய நாளாகக் கொண்டு தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) பதவி உயர்வுக்கான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் 2020-2021 ஆம் ஆண்டில் 01.07.2020 என்ற மைய நாளாகக்கொண்டு தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தை நிரப்ப கீழ்நிலை பதவியான மருந்தாளுநர் (Pharmacist) பதவியில் பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட வேண்டும் எனவும், இப்பதவிக்கு அரசாணை நிலை எண்.303,, நிதி (ஊதியக்குழு) துறை, நாள். 11.10.2017ன்படி Level 13, Rs.35,900-1,13,500 என்ற ஊதிய விகிதம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளுடன் நிரப்ப பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை வகுப்பு 3 மற்றும் 4-ம் நிலை சார்நிலை பணிகளுக்கான துணை விதிகளுக்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் (தீர்மான எண்.113/2018, நாள். 02.02.2018) அனுமதி பெறப்பட்டுள்ளது.

**தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) காலிப்பணியிட விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 01 | பதவியின் பெயர் | தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) | |
| 02 | மைய நாள் | 01.07.2020 | |
| 03 | ஊதிய விகிதம் | அரசாணை நிலை எண்.303,, நிதி (ஊதியக்குழு) துறை, நாள். 11.10.2017ன்படி Level 13 Rs.35900-113500. | |
| | **காலிப்பணியிட விவரம்** | (1) **அனுமதிக்கப்பட்ட பணியிடம் மொத்தம்** | 01 |
| | | (அ) தற்காலிக பணியிடம் | 00 |
| | | (ஆ) நிரந்தர பணியிடம் | 01 |
| | | (இ) தற்போது பணியில் உள்ளவர்களின் எண்ணிக்கை | 00 |
| | | (2) **மைய நாளுக்கு முன்பு / பின்பு ஏற்பட்ட காலிப்பணியிடம்** | |
| | | (அ) மைய நாளுக்கு முன்பு ஏற்பட்ட காலிப்பணியிடம் | 01 |
| | | (ஆ) 01.07.2020 முதல் 30.06.2021 வரை பணியில் இருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | 00 |
| | | (3) பதவி உயர்வு வழங்குவதால் பட்டியலாண்டில் / ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள காலிப்பணியிடம் | 00 |
| | | (4) அரசாணை எண்.103, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள். 09.10.2014ன்படி எதிர்பாராமல் ஏற்படவுள்ள காலிப்பணியிடம் $\frac{40 X 1}{100} = 0.4$ | 00 |
| | | G.O.Ms.No.368, P & AR, dated 18.10.93 Add one | 01 |
| | | (4) மொத்த காலிப்பணியிடம் | 02 |

**பொ.து.ந.க.எண்.இ7/10903/2021 &**

**பொ.சு.து.ந.க.எண். சி2/3818 /2020**

**தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) பதவியின் நியமனமுறை**

| வகை | பதவியின் பெயர் | நியமனமுறை | நிர்ணயிக்கப்படும் கல்வித்தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 12 | தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) | மருந்தாளுநர் பதவியிடத்தில் இருந்து பதவி உயர்வின் மூலம் | 1. அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட பட்டயம் (மருந்தியல்)<br>2. மருந்தியல் கவுன்சிலில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் | இப்பதவிக்கு ஏழாவது ஊதியக்குழுவின்படி, அனுமதிக்கப்பட்ட ஊதிய விகிதம் நிலை - 13 Rs.35900-113500 நிர்ணய நாள் ஒவ்வோராண்டு ஜூலை முதல் நாள் |

திருமதி.கே.வாணி, தலைமை மருந்தாளுநர் அவர்கள் 30.04.2020 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றதனால் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தை நிரப்ப பொது சுகாதாரத்துறையின் 16.09.2020 நாளிட்ட சுற்றறிக்கையின் வாயிலாக பொது சுகாதாரத்துறையில் 2020-2021 ஆம் ஆண்டில் தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) பதவிக்கு 01.07.2020ஐ மைய நாளாகக்கொண்டு, மருந்தாளுநர் பதவியில் (Pharmacist) பணிமூப்பு (Seniority) அடிப்படையில் கல்வித்தகுதிகளை கொண்ட தகுதியான நபர்களின் விவரங்கள் கீழ்கண்டவாறு பெறப்பட்டது.

**தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) பதவிக்கான பெறப்பட்ட தகுதியான நபர்களின் விவரம்**

| வ. எண் | பெயர் / பதவி திருவாளர்கள் | தற்போது பணிபுரியுமிடம் | தற்போது உள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | ப்பி. கலைச்செல்வி மருந்தாளுநர் | பொதுசுகாதாரத்துறை, சிந்தாதிரிப்பேட்டை மருந்து கிடங்கு | 08.01.1985 |
| 2 | எஸ்.மதிபிரகாஷ் மருந்தாளுநர் | கோட்டம்-58, மண்டலம்-5 கடப்பா ரங்கையா ஆரம்ப சுகாதாரமையம் | 08.01.1985 |
| 3 | திரு.N.முரளிதரன் மருந்தாளுநர் மருத்துவ சேவைகள் துறை | மண்டலம் – 5 (இராயபுரம்) (Doing Duty Central Medical Store, Chindadripet ) | 30.08.1985 |
| 4 | திருமதி .S. சாமுண்டீஸ்வரி மருந்தாளுநர் மருத்துவ சேவைகள் துறை | மண்டலம் – 5 (இராயபுரம்) (பெருமாள் பேட்டை) | 30.08.1985 |
| 5 | திரு.B.சங்கர் மருந்தாளுநர் மருத்துவ சேவைகள் துறை | மண்டலம் – 6 ( திரு.வி.க.நகர்) மாற்றுப்பணியில் மண்டலம்-2 | 20.09.1985 |
| 6 | ஜி. திருமாறன் மருந்தாளுநர் | மண்டலம் -7 | 10.11.1988 |
| 7 | எஸ்.சாந்தி மருந்தாளுநர் | மண்டலம்-8 அமைந்தகரை கிழக்கு ஆரம்ப சுகாதாரமையம் | 16.09.1993 |
| 8 | G.K.மேதினி மருந்தாளுநர் | மண்டலம் – 8 பாரதிபுரம் (UPHC) ஆரம்ப சுகாதாரமையம் | 28.12.2007 |

**பொ.து.ந.க.எண்.இ7/10903/2021 &**

**பொ.சு.து.ந.க.எண். சி2/3818 /2020**

பொது சுகாதாரத்துறை, மண்டலம்-5, 7, 8 மற்றும் மருத்துவ சேவைகள் துறையிலிருந்து மருந்தாளுநர்களின் விவரம் பெறப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ள அட்டவணையில் வரிசை-2ல் இடம் பெற்றுள்ள, திரு.எஸ்.மதிபிரகாஷ், மருந்தாளுநர், மண்டலம்-5 அவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடர்பாக தனியருக்கு மூன்றாண்டுகள் திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் செய்து (Charges proved and are of serious in nature stoppage of increment for three year without cumulative effect is awarded as punishment) என ஆணையர் அவர்களின் 05.05.2017 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டது.

இதன் தொடர்பாக தனியருக்கு வழங்கப்பட்ட தண்டனை ஆணையின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டது. சிறப்பு அதிகாரி-(மன்றம்) அவர்களால் தனியரின் மேல்முறையீட்டு மனுவினை நிராகரித்து ஆணையிடப்பட்டது. மேலும், தனியர் அரசுக்கு 14.03.2018 நாளிட்ட சீராய்வு மனு செய்துள்ளதை தொடர்ந்து அரசாணை (ப) எண்.482, நாள்.12.12.2019ன்படி, தனியரின் சீராய்வு மனுவினை நிராகரித்து ஆணையிடப்பட்டது.

பணிநியமன விதிகளின்படி, மைய (Crucial) நாளன்று நடப்பில் உள்ள ஒழுங்கு நடவடிக்கையின், தண்டனை காலம் நடப்பில் இருப்பின், பதவி உயர்விற்கு கீழே குறிப்பிட்டபடி தெரிவுப்பட்டியலில் ஒருவர் பெயர் சேர்ப்பதை பாதிக்கும் (Govt. Lr...No.248 P & AR., Dt..20.10.97) other Punishment such as Postponement of increments will be a bar for five years என்கிறவாறு உள்ளது.

அதனடிப்படையில், திரு.எஸ்.மதிபிரகாஷ், மருந்தாளுநர், மண்டலம்-5 என்பவரது மேற்கண்ட தண்டனை காலம் 30.06.2020 அன்று முடிவுற்ற நிலையில், 5 ஆண்டுகளில் ஒருமுறை பதவி உயர்வு வழங்குவதில் இருந்து தவிர்க்கப்பட (One Time Skipping from Panel) வேண்டும் என்பதன் அடிப்படையில். தற்போது தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) பதவிக்கு பரிந்துரைக்க இயலவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அட்டவணையில் வரிசை-3ல் இடம் பெற்றுள்ள, தனியரான திரு.N.முரளிதரன் மருந்தாளுநர், மண்டலம்-5 (மாற்றுப்பணியில் Central Medical Store, Chindadripet) என்பவரது பணிப்பதிவேட்டினை சரிபார்க்கப்பட்டதில், இத்தனியரது வயது முதிர்வு ஓய்வு 30.06.2020 என்கிறவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களின் ஓய்வு வயதை 58ல் இருந்து 59 ஆக உயர்த்தி அரசாணை பிறப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் 30.06.,2021 அன்று வயது முதிர்வு ஓய்வில் அனுமதிக்கப்பட வேண்டும். மேலும், தற்போதைய நிலையில் அரசு ஊழியர்களின் ஓய்வு வயதை 59ல் இருந்து 60 ஆக உயர்த்தி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் இத்தனியர் 30.06.2022 அன்று பிற்பகலில் வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளதால் இவர் தொடர்ந்து மருந்தாளுநராக பணிபுரிந்து வருகிறார் என்பதனை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் 2020-2021 ஆம் ஆண்டில் தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) பதவிக்கு 01.07.2020ஐ மைய நாளாகக்கொண்டு, மருந்தாளுநர் பதவியில் (Pharmacist) பணிமூப்பு (Seniority) அடிப்படையில் கல்வித்தகுதிகளை கொண்ட தகுதியான இரண்டு நபர்கள் அடங்கிய தற்காலிக தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு அமைகிறது .

**2020-2021 ஆம் ஆண்டின் தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) பதவிக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல் விவரம்**

| வ. எண் | பெயர் / பதவி திருவாளர்கள் | தற்போது பணிபுரியுமிடம் | தற்போது உள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | ப்பி. கலைச்செல்வி மருந்தாளுநர் | பொதுசுகாதாரத்துறை, சிந்தாதிரிப்பேட்டை மருந்து கிடங்கு | 08.01.1985 |
| 2 | திரு.N.முரளிதரன் மருந்தாளுநர் | மண்டலம் – 5 (இராயபுரம்) மருத்துவ சேவைகள் துறை (Doing Duty Central Medical Store, Chindadripet) | 30.08.1985 |

**பொ.சு.து.ந.க.எண்.இ7/10903/2021 &**
**பொ.சு.து.ந.க.எண். சி2/3818 /2020**

மேற்கண்டவாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களது 22.02.2021 நாளிட்ட சுற்றறிக்கையின்படி வெளியிடப்பட்ட தற்காலிக தெரிவுப்பட்டியலை துறை / வட்டார / மண்டலங்களுக்கு சுற்றுக்கு விடப்பட்டு ஆட்சேபணை கருத்துக்கள் ஏதும் இருந்தால் 08.03.2021 தேதிக்குள் பொது சுகாதாரத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்கு பிறகு கிடைக்கப்பெறும் ஆட்சேபணைகளை கண்டிப்பாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது எனவும், அதனால் எற்படும் விளைவுகளுக்கு சம்மந்தப்பட்ட துறைத்தலைவர்கள் / மண்டல அலுவலர்களே பொறுப்பாவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. தற்போதைய நிலையில் இப்பொருள் சார்ந்து ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படவில்லை.

மேற்கண்ட நபர்களது பணிப்பதிவேடுகள் சரிபார்க்கப்பட்டுள்ளது. இத்தனியர்கள் தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) பதவிக்கு உரிய கல்வித்தகுதிகளை பெற்றுள்ளதாகவும், இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை எனவும், கடந்த ஐந்து ஆண்டுகளில் தண்டனை ஏதும் பெறவில்லை என்றும் சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர் / துறைத்தலைவர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் 2020-2021 ஆண்டில் 01.07.2020ஐ மைய நாளாகக்கொண்டு தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) பதவி உயர்விற்கு தயாரிக்கப்பட்டுள்ள இரண்டு நபர்கள் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியல் வெளியிட சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஒப்புதல் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

எனவே,

அ பெருநகர சென்னை மாநகராட்சி, வகுப்பு-3 மற்றும் 4-ம் நிலை பணியாளர்களுக்கான திருத்தப்பட்ட சார்நிலைப் பணிவிதிகள் 2009–ன்படி, 01.07.2020ஐ மைய நாளாகக் கொண்டு 2020 -2021-ம் ஆண்டிற்கான தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) பதவிக்கு பணிமூப்பு (Seniority) அடிப்படையில் கல்வித்தகுதிகளை கொண்ட தகுதியான இரண்டு நபர்களான திருமதி.ப்பி.கலைச்செல்வி, மருந்தாளுநர், பொதுசுகாதாரத்துறை, சிந்தாதிரிப்பேட்டை மருந்து கிடங்கு (2) திரு.N.முரளிதரன் மருந்தாளுநர் மண்டலம் – 5 (இராயபுரம்)மருத்துவ சேவைகள் துறை (Doing Duty Central Medical Store, Chindadripet) அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

ஆ இறுதி தெரிவுப்பட்டியலில் மூப்பு நிலையில் இடம் பெற்றுள்ள தனியரான திருமதி ப்பி. கலைச்செல்வி, மருந்தாளுநர், பொதுசுகாதாரத்துறை, சிந்தாதிரிப்பேட்டை மருந்து கிடங்கு என்பவருக்கு தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) பதவிக்கானகாலிப்பணியிடத்தில் அரசாணை நிலை எண்.303,, நிதி (ஊதியக்குழு) துறை, நாள்.11.10.2017ன்படி Level 13, Rs.35,900-1,13,500 என்ற காலமுறை ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்டுள்ள இதரபடிகளுடன் பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 08.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) பதவி உயர்வு தெரிவுப்பட்டியல், அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**பொ.து.ந.க.எண்.இ6/11203/2021**

**தீர்மான எண்.646/2021** **நாள்:09-08-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு. V.இஸ்ரேல், துப்புரவு மேஸ்திரி, மண்டலம்-10 - தனக்கு அல்சர் மற்றும் இரத்த கொதிப்பு உள்ளதாலும் உடல்நிலை சரியில்லாத காரணமாகவும் துப்புரவு மேஸ்திரி பதவியை தொடர இயலவில்லை என தெரிவித்தது - தூய்மை பணியாளர் பதவிக்கு நிரந்தரமாக பதவி இறக்கம் செய்ய அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் திரு.V.இஸ்ரேல், துப்புரவு மேஸ்திரி, மண்டலம்-10 என்பவர், ஆணையர் அவர்களின் 16.08.2012 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, தூய்மை பணியாளர் பதவியில் இருந்து துப்புரவு மேஸ்திரியாக பதவி உயர்வு பெற்று 29/08/2012 அன்று பிற்பகல் முதல் மண்டலம்-10ல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். மேற்படி தனியருக்கு துப்புரவு மேஸ்திரி பதவியில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு ஊதியம் பெற்று வருகிறார். மேலும், துப்புரவு மேஸ்திரி பதவியில் தகுதிகாண் பருவம் மற்றும் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து, திரு.V.இஸ்ரேல், துப்புரவு மேஸ்திரி, மண்டலம்-10 அவர்களின் 03.06.2021 நாளிட்ட கடிதத்தில், தனக்கு அல்சர் மற்றும் இரத்த கொதிப்பு இருக்கின்ற காரணத்தால் தன்னால் துப்புரவு மேஸ்திரி பதவிக்கான வேலையினை சரிவர செய்ய இயலவில்லை என்பதால், தன்னை துப்புரவு மேஸ்திரி பதவியிலிருந்து தூய்மை பணியாளராக நிரந்தரமாக பதவி இறக்கம் செய்யுமாறு தெரிவித்துள்ளார்.

துப்புரவு மேஸ்திரி பதவியிலிருந்து தூய்மை பணியாளர் பதவிக்கு நிரந்தரமாக பதவி இறக்கம் செய்ய கோரி கடிதம் அளித்துள்ள திரு.V.இஸ்ரேல், துப்புரவு மேஸ்திரி அவர்கள், துப்புரவு மேஸ்திரி பதவியில் சேர்ந்த விவரம் கீழ்கண்டவாறு அளிக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர்/பதவி/பணிபுரியும் மண்டலம் | துப்புரவு மேஸ்திரி பதவியில் சேர்ந்த நாள். |
|---|---|---|
| 01. | திரு. V.இஸ்ரேல்,<br>துப்புரவு மேஸ்திரி,<br>மண்டலம் -10 | 29.08.2012 |

மேற்கண்ட தனியர் பணி விதிகளின்படி, தூய்மை பணியாளர் பதவியில் முதுநிலையின் அடிப்படையில் துப்புரவு மேஸ்திரி பதவி உயர்வுக்குண்டான பணித்தகுதிகளைப் பெற்றிருந்ததால் ஆணையர் அவர்களின் 16/08/2012 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி துப்புரவு மேஸ்திரியாக பதவி உயர்வு பெற்று 29/08/2012 முதல் மண்டலம்-10ல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். தனியரின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில் தனியருக்கு துப்புரவு மேஸ்திரி பதவியில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என அறியப்பட்டது.

மேலும், Tamil Nadu Government Servants (Conditions of Service) Act 2016, Tamil Nadu Act No.14 of 2016 விதி 57 பிரிவு 2ல் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2) Relinquishment of a right or privilege for a temporary period shall be accepted if it is made for a period of not less than three years, subject to the condition that after the expiry of the said period, the claim of the right or privilege relinquished will be with reference to the state of affairs that exist on the date of expiry of the period of relinquishment and without restoration of original seniority. If relinquishment of right or privilege is made permanently and is accepted, subsequent claim of the relinquished rights or privileges shall not be entertained.

மேற்கண்ட தனியரின் கோரிக்கை தமிழ்நாடு மாநில சார்நிலை பணியாளர்களுக்கான பணி விதிகள் 57(2)ன்படி துப்புரவு மேஸ்திரி பதவியிலிருந்து நிரந்தரமாக பதவி இறக்கம் செய்யப்பட வேண்டும். மேலும், தனியர் பதவி உயர்வு வேண்டாம் என தெரிவித்துள்ளது நிரந்தரமாக நடைமுறையில் இருக்கும், இவரின் முதுநிலை தூய்மை பணியாளர் பதவியில் சேர்ந்த நாளின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும்.

**பொ.து.ந.க.எண்.இ6/11203/2021**

ஆகவே, திரு.V.இஸ்ரேல், துப்புரவு மேஸ்திரி, மண்டலம்-10 அவர்கள் அளித்த கோரிக்கையின் அடிப்படையில் துப்புரவு மேஸ்திரி பதவியிலிருந்து நிரந்தமாக பதவி இறக்கம் செய்து தூய்மை பணியாளர் பதவியில் பணியமர்த்த, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 08.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"துப்புரவு மேஸ்திரி பதவியிலிருந்து நிரந்தமாக பதவி இறக்கம் செய்து தூய்மை பணியாளர் பதவியில் பணியமர்த்த, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * * *

**ப.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN15/00406/2021**

**தீர்மானஎண்.647/2021** **நாள்:09-08-2021**

# தானப்பத்திரம்

Thiru. K. Shivashankar and M/s. Eskay Designs அவர்களின் பொது அதிகார முகவர் M/s. Mannur Whitefield Creations Private Limited அவர்கள் S.No.74/84B and 74/84C பட்டாவின் படி நீலாங்கரை கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN15/00406/2021 நாள்:27.07.2021ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள்.09.12.2020 - ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை, திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் Thiru. K. Shivashankar and M/s. Eskay Designs அவர்களின் பொது அதிகார முகவர் M/s. Mannur Whitefield Creations Private Limited அவர்கள் மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) Thiru. K. Shivashankar and M/s. Eskay Designs அவர்களின் பொது அதிகார முகவர் M/s. Mannur Whitefield Creations Private Limited மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி மொத்த பரப்பளவு 9788.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 1774.00 சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கென 40.32 ச.மீ நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

(ஆ) Thiru. K. Shivashankar and M/s. Eskay Designs அவர்களின் பொது அதிகார முகவர் M/s. Mannur Whitefield Creations Private Limited ஆகியோர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019 க்கு ஏற்ப உள்ளது. மனைப்பிரிவிற்கு அணுகு சாலையாக 9.00 மீட்டர் அகலம் உள்ள சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 220.00 ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 ன்படி 10,000ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகை யாகவோ செலுத்தலாம்.

(உ) மனைப்பிரிவின் பரப்பளவு 10,000 ச.மீ க்குள் இருப்பதால் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீடு நிலமாக அளிப்பதற்கு ஈடாக தொகையினை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்.

(ஊ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1%பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO-விற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். Thiru. K. Shivashankar and M/s. Eskay Designs அவர்களின் பொது அதிகார முகவர் M/s. Mannur Whitefield Creations Private Limited அவர்கள் அதற்கேற்றவாறு 40.32 சதுர மீட்டர் பரப்பளவு பெருநகர

**ப.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN15/00406/2021**

சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். அவ்வாறே 40.32 சதுர மீட்டர் பரப்பளவு TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(எ) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அமைப்பதற்கு தேவையான தோராய அபிவிருத்தி கட்டணமாக விண்ணப்பதாரரிடம் இருந்து கட்டணம் வசூலிக்க வேண்டும். மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அபிவிருத்தி செய்ய தேவையான தொகை ரூ.26,54,000/- வசூலிக்கப்பட வேண்டும்.

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் Thiru. K. Shivashankar and M/s. Eskay Designs அவர்களின் பொது அதிகார முகவர் M/s. Mannur Whitefield Creations Private Limited அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென ஒதுக்கப்பட்ட 1774.00 சதுர மீட்டர் பரப்பளவு நிலமும், பொது பயன்பாட்டிற்காக 40.32 சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தினையும் தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதபடுகிறது.

எனவே,

(1) S.No.74/84B and 74/84C பட்டாவின் படி நீலாங்கரை கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 1774.00 சதுர மீட்டர் நிலம் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 40.32 சதுர மீட்டர் நிலத்தினையும் Thiru. K. Shivashankar and M/s. Eskay Designs அவர்களின் பொது அதிகார முகவர் M/s. Mannur Whitefield Creations Private Limited அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைக்க செலவின தொகை ரூ.26,54,000/- ஐ (ரூபாய் இருபத்தி ஆறு லட்சத்து ஐம்பத்தி நான்காயிரம் மட்டும்) மனை உரிமையாளர்களிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர்/ஆணையரது 09.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தானப்பத்திரம், *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******